1972 மார்ச் 14]

திரு. கே. எ. வகாப்: காதியில் உள்ள இந்தக் குடிசைத் தொழில்களை தொழில் கூட்டுறவு சங்கங்கள் நடத்துகின்றன. அந்தக் கூட்டுறவு சங்கங் களோடு குடிசைத் தொழில் சங்கங்களையும் சேர்த்துவிட்டால் திறமையாக நடைபெற வாய்ப்பு இருக்காதா? அதை அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: கதர் கைத்தொழில் வாரியத்தில் எல்லாத் தொழில்களுமே கூட்டுறவுத் துறையில் நடக்க வேண்டுமென்றுதான் 11-வது செக்ஷனில் இருக்கிறது. கூட்டுறவுத் துறையில்தான் பெருவாரியாக நடந்து கொண்டு வருகிறது.

Tourist Bungalow for Honaguruki.

* 494 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a tourist bungalow near the Great Banian tree at Honaguruki in Kelamangalam block, Dharmapuri district; and

(**b**) if so, when it will be constructed?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY: Sir, the banian tree at Honaguruki is an historical tree and previously, the Britishers used to hold Jamabandis there; there is a temple and a Kalyana Mantapam also and marriages are performed there. At the time of the visit of our Governor, he promised to recommend to this Government to construct a tourist bungalow for tourists. May I request the Hon. Minister to consider the recommendation sympathetically?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, சுற்றுலாத்துறையின் மூலமாக சுற்றுலா விடுதிகள் கட்டுவதுபற்றி திரு. வெங்கடசாமி அவர்கள் இங்கே கேட்டார்கள். கெளமங்களம் வட்டத்தில் ஹோனகுருக்கியில் இருக்கிற ஆலமரம் சிறப்பானது. அதை நானும் பார்த்திருக்கிறேன். ஆனால் அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கத்தக்க சிறப்புடையது அல்ல. அதிகமாக வருவார்கள் என்று விடுதி கட்ட முடியாது. அல்லது விடுதி கட்டி அந்த ஆலமரத்தைக் காட்டி பயணிகளை ஏமாற்றவும் அரசு தயாராயில்லை. ஆகவே தற்போதுள்ள நிதி நிலைமையில் அங்கே விடுதி கட்டுவது என்பது இப்போது இயலாத காரியம்.

1972 மார்ச் 14]

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, Jekkeri Banian tree, is one of the oldest banian trees in our State with great antiquity and it is very close to Kelamangalam Railway Station in the Bangalore-Salem Railway line. But it is in a ruined condition. May I know whether it will be possible to hand it over that to the Highways Department to maintain and protect and will Government sanction a small amount to construct a Mantapam there as assured by His Excellency the Governor?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அந்த மரம் பழமையானது என்பதை நான் அறிவேன். அந்த மரத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் ஏற்பாடு செய்யலாம். சுற்றுலா விடுதி கட்டுவது என்பது க்ஷேத்திரங்கள், கோடைவாசஸ்தலங்கள் போன்ற இடங்களாகும். இந்தத் திட்டம் இதைவிட முக்கியமான மற்ற இடங்களில் எல்லாம் பூர்த்தியான பிறகு வேண்டுமானால் இங்கேயும் கட்டலாம். அதுவரை பொறுத்திருக்கும்படி திரு. கோதண்டராமைய்யா அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். சின்னசாமி: தலைவர் அவர்களே, இயற்கை எழில் கொஞ்சும் தருமபுரி மாவட்டத்தில் பயணிகளைக் கவரும் வகையில் ஏதாவது செயல் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தற்போது தருமபுரி மாவட்டத்தில் நீர்வீழ்ச்சி அமைந்துள்ள ஒகேனக்கல்லில் ஒரு சுற்றுலா மாளிகை கட்டப்பட்டு வருகிறது.

கல்யாண சோழபுரம் அறக்கட்டளை.

*495. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலூகா கல்யாண சோழபுரம் அறக்கட்டளைக்குச் சொந்தமான சொத்துக்களின் மதிப்புக்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: சுமாராக ரூ. 3,25,800 சொத்தின் மதிப்பாகும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரம் தாலூகா கல்யாண சோழபுரம் அறக்கட்டளைக்குச் சொந்தமான சொத்துக்கள் சரியான முறையில், ஒழுங்காக நிர்வகிக்கப்படுகிறதா என்பதைப் பரிசிலிக்க அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?